பக்கங்கள் 23 + 05

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

**வெடுக்குநாறிமலை விவகாரம்:**

## ஜனாதிபதியைச் சந்திக்க தமிழ்க் கட்சிகள் தீர்மானம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை உடனடியாகச் சந்தித்து, வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்ட 8 தமிழர் களையும் உடனடியாகப் பிணை 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 பங்குனி 03 சனிக்கிழமை 16.03.2024 அதிர்வு 229




**"வெடுக்குநாறிமலை ஆதிசிவன் தமிழர்களின் வரலாற்று மரபுரிமை"**

# கைதானவர்களை விடுவிக்கக் கோரி வவுனியாவில் விண்ணதிரக் கோஷம்

## சிறைச்சாலை வரை சென்றது ஆர்ப்பாட்டப் பேரணி

(கே.வசந்தன்)

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் விடுவிக்கக் கோரியும், பொலிஸாரின் அராஜகத்தைக் கண்டித்தும் வவுனியாவில் ஆர்ப்பாட்டப் பேரணி இன்று முன்னெடுக்கப்பட்டது. 02






உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# கைதானவர்களை விடுவிக்கக் கோரி வவுனியாவில் விண்ணதிரக் கோஷம்



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டர்களின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் இன்று காலை ஆரம்பிக்கப்பட்ட வாகனப் பேரணி வவுனியா பழைய பஸ் நிலையத்தை வந்தடைந்ததைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமானது.

கைது செய்யப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பேரணி வவுனியா, பழைய பஸ் நிலையத்தில் ஆரம்பித்து அங்கிருந்து மணிக்கூட்டு கோபுரச் சந்தியை அடைந்து, பசார் வீதியூடாகச் சென்று ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து அங்கு வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள தொல்பொருள் திணைக்களத்தை முற்றுகையிட்டுக் கோஷம் எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரார்கள், பின்னர் கண்டி வீதி ஊடாக சென்று வவுனியா சிறைச்சாலை முன்றிலில் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டவர்கள், “பொலிஸ் அராஜகம் ஒழிக, வெடுக்குநாறிமலை எங்கள் சொத்து, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் தமிழர்களின் வரலாற்று மரபுரிமை, கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய், வழிபாட்டு உரிமையைத் தடுக்காதே, சிவ வழிபாட்டை தடை செய்யாதே, வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம், இராணுவமே வெளியேறு, பொய் வழக்குப் போடாதே, பௌத்தமயமாக்கலை உடனே நிறுத்து” என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பினர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

“மகா சிவராத்திரி வழிபாட்டைக் குழப்பி பொலிஸார் அராஜகத்தைக் கட்டவிழ்த்துக் கைது செய்யப்பட்ட வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேரும் பொய்க் குற்றச்சாட்டின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் 8 பேரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அவர்களின் விடுதலைக்காக நாம் தெர்ர்ந்தும் போராடுவோம்.” – என்றனர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உள்ளிட்ட தமிழ் அரசியல்வாதிகள், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள், சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியகத்தின் மதகுரு அருட்தந்தை ரமேஸ், கிறிஸ்தவ மதகுருமார், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கைதானவர்களை விடுவிக்கக் கோரி வவுனியாவில் விண்ணதிரக் கோஷம்



# வெடுக்குநாறியில் கைதானவர்களின் உண்ணாவிரதப் போராட்டம் நிறைவு!

(கே.வசந்தன்)

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்டவர்களின் உணவு தவிர்ப்புப் போராட்டம் இன்று முடித்து வைக்கப்பட்டது.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது கடந்த 8 ஆம் திகதி நெடுங்கேணி பொலிஸாரால் ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 5 பேர் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் உணவு தவிர்ப்பு ப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரியும், பொலிஸ் அராஜகத்தைக் கண்டித்தும் வவுனியாவில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றிருந்தது.

ஆர்ப்பாட்டம் வவுனியா சிறைச்சாலை முன்றலில் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, வேலன் சுவாமி, அருட்தந்தை ரமேஸ், சட்டத்தரணி க.சுகாஸ், நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் கைது செய்யப்பட்டர்களின் உறவினர்களுடன் கலந்துரையாடி அவர்களின் இணக்கத்துடன் சிறைச்சாலைக்குச் சென்று உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆலயப் பூசகர் மதிமுகராசா, எஸ்.தவபாலசிங்கம், கிந்துஜன், தமிழ்ச்செல்வன், விநாயகமூர்த்தி ஆகிய 5 பேருடனும் கலந்துரையாடி அவர்களுக்கு நீராகாரம் கொடுத்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நிறைவு செய்து வைத்தனர்.

இதன்போது, அவர்களின் விடுதலைக்காகத் தாம் வெளியில் ஒன்றுபட்டு தொடர் போராட்டங்களை முன்னெடுப்பதாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முடிந்து வைத்தவர்கள் உறுதிமொழி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பிரபா கணேசனின் கட்சியுடன் ஐக்கிய சுதந்திரக் கட்சி கூட்டணி

## ஒப்பந்தம் கைச்சாத்து

(ஆ.ரமேஷ்)

ஜனநாயக மக்கள் காங்கிரஸ் மற்றும் ஐக்கிய சுதந்திர கட்சி என்பன இணைந்து புதிய கூட்டணி ஒன்றை அமைக்கும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

கொழும்பு, பம்பலப்பிட்டி லூரிஸ் வீதியில் அமைந்துள்ள ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைமையகத்தில் இது தொடர்பான நிகழ்வு நேற்று இடம் பெற்றது என்று ஐக்கிய சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் சவேரியார் ஜேசுதாஸ் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் காங்கிரஸின் சார்பில் அதன் தலைவர் பிரபா கணேசன், கட்சியின் பொதுச்செயலாளர் கங்காதரன் சுரேஷ் ஆகியோர் அடங்கிய குழுவினர் கலந்துகொண்டனர்.

அதேபோல் ஐக்கிய சுதந்திரக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் சோம் கோச் மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் சவேரியார் ஜேசுதாஸ் உள்ளிட்ட தேசிய சபை உறுப்பினர்களும் பங்கேற்று உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

நுவரெலியா மாவட்டம், ஹட்டன் பிரதேசத்தை பிரதானமாகக் கொண்டு செயற்படும் ஐக்கிய சுதந்திரக் கட்சி, கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்து திசை காட்டி சின்னத்தில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டி யிட்டது.

---

**ஜனாதிபதியைச்....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் விடுவிக்க நடவடிக்கை எடுப்பது என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் கூடித் தீர்மானித்துள்ளன.

யாழ்ப்பாணம், நல்லூரில் உள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில் இன்று இந்தச் சந்திப்பு நடந்தது.

விக்னேஸ்வரன் எம்.பி. தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் புளொட் தலைவர் த.சித்தார்த்தன் எம்.பி., ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறிகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டுள்ள 8 தமிழர்களும் பிணையில் செல்ல முடியாதவாறு, தொல்லியல் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அவர்கள் தொடர்பான அடுத்த வழக்கு தவணை எதிர்வரும் செவ்வாய்க்கிழமையாகும். அதற்கு முன்னதாக ஜனாதிபதி ரணிலைச் சந்தித்து, கைதான தமிழர்கள் மீதான வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முன்னர் அவர்கள் மீதான குற்றப் பத்திரத்தில் மாற்றம் செய்து, உடனடியாகப் பிணை வழங்கும் ஏற்பாடுகளைச் செய்ய வலியுறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அடுத்த கட்டமாக வெடுக்குநாறிமலை விவகாரத்தில் நிரந்தரமான தீர்வைக் காண, ஜனாதிபதியுடன் அடுத்த கட்டமாக பேசவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.






# ஏப்ரல் 19 முதல் ஜூன் 1 வரையில் 7 கட்டங்களாக மக்களவைத் தேர்தல்

## தமிழகத்தில் ஏப்ரல் 19 இல் வாக்குப் பதிவு

இந்திய மக்களவைத் தேர்தல் 2024 இற்கான அட்டவணையை இந்திய தலைமைத் தேர்தல் ஆணையம் இன்று அறிவித்தது.

அதன்படி, ஏப்ரல் 19 ஆம் திகதி தொடங்கி ஜூன் 1 வரை 7 கட்டங்களாக மக்களவைத் தேர்தல் நடைபெறுகிறது. தமிழகம், புதுச்சேரியில் ஒரே கட்டமாக ஏப்ரல் 19 ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெறுகிறது. நாடு முழுவதும் மக்களவைத் தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 4 ஆம் திகதி எண்ணப்படுகிறது.

தலைநகர் டில்லியில் விஞ்யான் பவனில் நடந்த பத்திரிகையாளர்கள் சந்திப்பில் தலைமைத் தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் மக்களவை தேர்தல் அட்டவணையை அறிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,


“இந்த ஆண்டில் நடைபெறும் மிக முக்கியமான செய்தியாளர்கள் சந்திப்பு இதுதான். மக்களவைத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயாராக உள்ளன.

மக்களவைத் தேர்தலை நடத்த நாங்கள் முழு அளவில் தயாராக இருக்கிறோம். தேர்தலை திருவிழா போல் நடத்த வேண்டும் என்பதே தேர்தல் ஆணையத்தின் நோக்கம். தேர்தல் திருவிழாவில் எங்களுடன் சேர்ந்து நீங்களும் பங்கேற்றுக் கொள்ளுங்கள்.

2024 மக்களவைத் தேர்தலில் வாக்களிக்க நாடு முழுவதும் 96.8 கோடி வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 49.7 கோடி பேர் ஆண்கள், 47.1 கோடி பேர் பெண்கள். மாற்றுத்திறனாளிகள் 88.4 லட்சம் பேர். மாற்றுப் பாலினத்தவர் 48 ஆயிரம் பேர். மொத்த வாக்காளர்களில் 1.82 கோடி பேர் முதன்முறை வாக்காளர்களாவர். 85 வயதைக் கடந்த வாக்காளர்கள் 82 லட்சத்துக்கும் மேல் உள்ளனர். 100 வயதைக் கடந்த வாக்காளர்கள் 2.18 லட்சம் பேர் உள்ளனர்.

வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக 10.5 லட்சம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும். 55 லட்சம் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்படும். எவ்வித வன்முறையும் இல்லாமல் அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெறும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. மிகுந்த உயர்ந்த தரத்தில் தேர்தல் நடத்தப்படும் என உறுதியளிக்கிறேன். தேர்தல் நேரத்தில் போலி செய்திகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தேர்தல் நியாயமாக, நேர்மையாக நடத்தப்படும்.

அரசியல் கட்சிகள் பொறுப்புணர்வோடு பிரச்சாரம் செய்ய வேண்டும். சமூக வலைதளப் பிரசாரங்களையும் கவனமாக மேற்கொள்ள வேண்டும். நட்சத்திரப் பேச்சாளர்கள் கண்ணியத்துடன் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும். சாதி, மத ரீதியாகவோ, தனிப்பட்ட முறையிலோ விமர்சித்து பிரச்சாரத்தில் ஈடுபடக் கூடாது. தேர்தல் பிரச்சாரங்களில் அரசியல் கட்சிகள் சிறார்கள், மாற்றுத் திறனாளிகளைப் பயன்படுத்தக் கூடாது. மக்களவைத் தேர்தலை நியாயமாக, நேர்மையாக நடத்தப்படும். மக்களவைத் தேர்தல் பணியில் 1.5 கோடி பேர் ஈடுபடுத்தப் படுகின்றனர். நாடு முழுவதும் 2100 தேர்தல் பார்வையாளர்கள் நியமிக்கப் படுகிறார்கள். ” – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தேர்தலில் மீனவர் பிரச்சினை

இலங்கை, இந்தியா - இரண்டு நாடுகளிலும் இது தேர்தல் ஆண்டு. தேர்தல் ஜுரம் ஏற்கனவே இரண்டு நாடுகளிலும் தொற்றிக் கொண்டு விட்டது.

இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் இன்னும் ஆறு மாதத்தில் நடக்கும்.

இந்தியாவில் பொதுத் தேர்தல் பற்றிய விவரம் சற்று முன்னர் அறிவிக்கப்பட்டு விட்டது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான விவகாரங்களும் இந்த தேர்தல் கால சர்ச்சைகளில் முக்கிய இடங்களைப் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை - இந்தியா இடையிலான 'எட்கா' என்ற வர்த்தக ஒப்பந்தம் இலங்கையில் முக்கிய பேசு பொருளாக இருக்கும். குறிப்பாக, தென்னிலங்கைக் கட்சிகள் இது குறித்து அதிகம் பிரஸ்தாபிக்கும். இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவின் மாநிலமாக இலங்கையை மாற்றி விடாதீர்கள் என்ற தமது கோரிக்கையை இந்தத் தேர்தலில் பெரும் பிரசார விவகாரமாக விமல் வீரவன்ஸ போன்ற பேரினவாதிகள் நிச்சயம் கையில் தூக்கிப்பிடிப்பர்.

எல்லாவற்றையும் விட இன்னொரு விடயம் முக்கியமானதாக - பூதாகரமாக - தேர்தல் சமயத்தில் எழுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழக - இலங்கை மீனவர்கள் பிரச்சனை மற்றும் கச்சதீவு விவகாரம் ஆகியன தமிழ்நாட்டிலும் இலங்கையின் வடக்கு கிழக்கிலும் தேர்தலையொட்டிய பிரதான பேசு பொருளாக மாறும் ஏது நிலைகள் தென்படுகின்றன.

ஏற்கனவே மீனவர் பிரச்சினை விவகாரத்தை தமது தேர்தல் பிரச்சார மேடைக்கு கொண்டு வந்து விட்டார் இந்திய பிரதமர் நரேந்திர மோடி.

கடந்த வெள்ளிக்கிழமை கன்னியாகுமரியில் இடம் பெற்ற பாரதிய ஜனதா கட்சியின் கூட்டத்தில் பேசிய அவர் - ''இலங்கையில் நமது (இந்திய) மீனவர்களுக்குத் தூக்கு தண்டனை வழங்கப்பட்டது. நாம் எடுத்த நடவடிக்கைகளால் மீனவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

''மீனவர்கள் ஏன் இலங்கை அரசால் கைது செய்யப்படுகிறார்கள்? அதற்கு காரணம் யார்? இந்தப் பாவத்தை செய்தவர்கள் நீங்களோ, நானோ அல்லர். தி.மு.கவும், காங்கிரஸும்தான்.

''இந்தப் பாவச் செயலுக்கான கணக்கை அவர்களிடம் கேட்கும் நேரம் வந்து விட்டது. கேட்பீர்களா? காங்கிரஸ், தி.மு.க. செய்த பாவங்களுக்கான பலனை அனுபவிப்பார்கள்.'' - என்று கூறி இந்த விடயத்தைத் தேர்தல் சர்ச்சையாக்கும் சமாச்சாரத்துக்குப் பிள்ளையார் சுழி போட்டிருக்கின்றார் பிரதமர் மோடி.

இதற்கிடையில் மோடியின் இந்தக் கருத்துக்குத் தகுந்த பதிலடி தந்திருக்கின்றார் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் -

''கடந்த காலத்தில் தி.மு.க. செய்த பாவத்தால்தான் இலங்கை அரசால் இன்று தமிழ்நாட்டு மீனவர்கள் இன்னலுக்கு ஆளாகிறார்கள் எனப் பிரதமர் பதவியில் இருக்கும் மோடி கூசாமல் புளுகி இருக்கிறார். தி.மு.க. அரசின் கடும் எதிர்ப்பையும் மீறித்தான் கச்சத்தீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்டது என்ற உண்மை வரலாற்றைத் தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். நாட்டின் ஒரு பகுதியை மாநில அரசால் மற்றொரு நாட்டுக்கு வழங்க முடியும் என நம்பும் அளவுக்குத்தான் பிரதமர் அப்பாவியாக இருக்கிறாரா? கச்சத்தீவை மீட்க கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுத்த நடவடிக்கை என்ன? தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை அரசால் தொடர்ந்து சிறைப் பிடிக்கப்படுவதையும் சித்திரவதைக்கு ஆளாவதையும் தடுத்து நிறுத்தாதது ஏன்? அவர்கள் இந்தியர்கள் இல்லையா? அதானி நிறுவனத்தின் வர்த்தக நலன்களுக்காக இலங்கை அரசுக்கு அழுத்தம் தந்த ஒன்றிய பா.ஜ.க. அரசு இந்திய மீனவர்களின் பாரம்பரிய உரிமைக்காக வாய்திறக்காதது ஏன்? படகுகளைப் பறிமுதல் செய்து நாட்டுடைமை ஆக்கிவிட்டதாக அறிவிக்கிறது இலங்கை அரசு. இந்திய அரசு இதை அதிகாரப்பூர்வமாக, வெளிப்படையாகக் கண்டிக்காதது ஏன்? இரண்டாவது முறையாகக் கைது செய்யப்படும் மீனவர்களுக்குச் சிறைத்தண்டனை வழங்கும் நடைமுறை என்பதே, பா.ஜ.க. ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டதுதான். இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? இதற்கெல்லாம் பதிலில்லை'' - என்று தெரிவித்திருக்கின்றார் தமிழக முதல்வர்.

போதாக்குறைக்கு இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்கும் வகையில் - இலங்கைக் கடற்படைக்கு உதவும் விதத்தில் - கடற் சாரணர் அமைப்பு ஒன்றை இலங்கை உருவாக்கும் என்ற இலங்கை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சமீபத்திய அறிவிப்பும் தேர்தல் பிரச்சாரத்தில் மீனவர் சர்ச்சையை மேலும் சூடாக்கி இருக்கின்றது.



# கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கல்!

## தமிழக முதல்வர் மு.க ஸ்டாலின் வாழ்த்துத் தெரிவிப்பு

உலக தமிழ் சங்கத்தின் 31 ஆம் ஆண்டு விழாவில் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கு சேவைக்காக வாழ்நாள் சாதனை விருது வழங்கப்பட்டுள்ளது.

சென்னை ஜானகி கல்லூரி அரங்கில் இடம்பெற்ற விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், விஞ்ஞானி வீர முத்துவேல், நல்லி குப்பசாமி செட்டியார் ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்குக் கடந்த காலங்களில் சமூக சேவைக்காக உலக சாதனைப் புத்தகத்தில் உலக சாதனையாளர் விருது வழங்கப்பட்டிருந்த நிலையில், தற்போது வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கப்பட்டுள்ளது.

உலகத்தில் பல தமிழ் அரசியல் தலைமைகள் இருக்கின்ற போதிலும் இலங்கையை சேர்ந்த ஒரு தமிழ் அரசியல் தலைமைக்கு சமூக சேவைக்காக உலக தமிழ் சங்கத்தால் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இளம் வயதில் அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த செந்தில் தொண்டமான், மாகாண அமைச்சராக இருந்த கால கட்டத்தில் பதுளை மற்றும் மொனராகலை பகுதிகளில் தோட்டப் புறத் தமிழ் மக்களுக்கு 64 சதவீத மாத்திரம் வழங்கப்பட்ட மின்சாரத்தை குறுகிய காலத்தில் முழுமையாக 100 சதவீத வழங்கினார்.

ஊவா மாகாணத்தில் 40 வருட காலமாகப் பதிவு செய்யப்படாமல் இருந்த 250 விளையாட்டு கழகங்களை இளைஞர்களின் நலன் கருதி ஒரே மாதத்தில் பதிவு செய்து இளைஞர்களுக்கு விளையாட்டு துறையில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்தமை, இலங்கை வரலாற்றில் முதல் முறையாக மலையகத்தை சேர்ந்த 15000 முதியோர்களுக்கு முதியோர் கொடுப்பனவு வழங்கியமை, இலங்கை முழுவதும் பொருளாதார பின்னடைவில் உள்ள 40 லட்சம் குடும்பங்களுக்குத் தமிழக அரசிடம் இருந்து 40 ஆயிரம் மெட்ரிக் டொன் அரிசி,1 00 மெட்ரிக் டொன் மருந்து, 5 வயதுக்கு உட்பட்ட குழந் தைகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 500 மெட்ரிக் டொன் பால் மா என்பவற்றைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அதனை தானே முன்னின்று நாடு முழுவதும் முழுமையாக விநியோகம் செய்து சிறந்த நிர்வாகத் திறனை வெளிப்படுத்தியிருந்தார். இதற்காக இந்திய அரசு பாராட்டுக்களை தெரிவித்துள்ளது.

மேலும் இலங்கையில் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவி வந்த சூழ்நிலையில் செந்தில் தொண்டமான் பாண்டிச்சேரி அரசுடன் பேச்சு நடத்தி இலங்கை அரசுக்கு மருந்துகளை பெற்றுக் கொடுத்தார்.

10000 மேற்பட்ட முதியோர்களுக்கு மூக்கு கண்ணாடி, சக்கர நாற்காலி, செவிபுலனற்றோருக்கான கருவி போன்ற உபகணங்கள் வழங்கி வைத்தார். மலையகப் பெண்களுக்கு முதல் முறையாக பயிற்சியளித்து ஓட்டுநர் அடையாள அட்டைகள் செந்தில் தொண்டமானால் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

இலங்கை அரசால் இந்திய மீனவர்கள் 6 பேருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட போது செந்தில் தொண்டமானின் முயற்சியால் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். கடந்த காலங்களில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 1000 மேற்பட்ட இந்திய மீனவர்கள் 100 மேற்பட்ட படகுகளுடன் செந்தில் தொண்டமானின் முயற்சியால் விடுவிக்கப்பட்டன.

செந்தில் தொண்டைமானின் அயராத உழைப்பாலும், அரசியல் வளர்ச்சியாலும் இலங்கை வரலாற்றில் முதல் முறையாக மலையக தமிழர் ஒருவர் முதலமைச்சராக தெரிவு செய் யப்பட்டார்.

இதனை எண்ணி மலையக மக்கள் பெருமிதம் கொண்ட அதேவேளை மலையகத் தமிழர் ஒருவர் இலங்கை வரலாற்றில் முதல் முறையாக ஆளுநராக நியமிக்கப்பட்டமையை எண்ணியும் மலையக மக்கள் பெருமிதம் கொண்டனர்.

2006 ஆம் ஆண்டு இந்தியாவில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டுக்கு பீட்டா அமைப்பால் தடை விதிக்கப்பட்ட போது, போராட்டங்களை முன்னெடுத்து, சட்ட ரீதியாக இந்தப் பிரச்சினையை அணுகி ஜல்லிக்கட்டை மீட்டெடுத்து தமிழ் கலாச்சரத்தை நிலை நாட்ட செந்தில் தொண்டமான் முக்கிய பங்கு வகித்தார்.

ஜல்லிக்கட்டுக்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்தியாவில் முதல் முறையாக செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் இந்திய அரசால் தபால் முத்திரைகள் வெளியிடப்பட்டன.

தமிழ் கலாச்சாரத்தை கடல் கடந்து நிலைநாட்டுவதற்காக பிரான்சில் திருவள்ளுவர் சிலை திறந்து வைத்து, இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் நேரடி பாராட்டுக்களை பெற்றார்.40 வருட காலமாக ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் இந்தியாவில் அகதிகளாக உரிமைகள் அற்ற சமூகமாக, முடங்கிக் கிடந்த நிலையில், அவர்களுக்குச் செந்தில் தொண்டமான் முதல் முறையாக கடவுச் சீட்டுகளை

(08 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கல்!

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்க தேவையான நடவடிக்கை களை வெற்றிகரமாக மேற்கொண்டார். அந்த மக்களுக்கு மறுவாழ்வு ஏற்படுத்திக் கொடுத்தார். மேலும் முதல் கட்டமாக 200 பேருக்குக் கடவுச் சீட்டுகளை வழங்கி இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இலங்கையில் வடகிழக்கில் காணி உரிமைக்காக யுத்தம் இடம்பெற்று, பல்லாயிரம் கணக்கான மக்கள் காணி இன்றி அவதியுறும் நிலையில் கிழக்கு மாகாணத்தில் செந்தில் தொண்டமானின் கடும் முயற்சியால் 06 மாதங்களுக்குள் 2000 மேற்பட்டோருக்கு காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கையில் வரலாறு காணாத வகையில் 1008 பொங்கல் பானைகள்,1500 பரத நாட்டிய கலைஞர்களின் நடனம் , 500 கோலங்களுடன் தமிழ் கலாசாரத்தை உலகறிய செய்யும் வகையில் இலங்கை வரலாற்றில் முதல் முறையாக செந்தில் தொண்டமானால் பொங்கல் விழா திருகோணமலையில் நடத்தப்பட்டது.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு தமிழகத்தை தாண்டி சர்வதேசத்தில் முதல் முறையாக நடத்திச் சாதனை படைத்தார்.

இலங்கை - இந்திய தூதுவர்களுக்கு இணையாக இந்தியாவுக்கும் இலங்கைக்குமான பாலமாகச் செந்தில் தொண்டமான் செயற்பட்டு வருகிறார்.

இலங்கைக்கு இந்தியாவுக்கு இடையிலான பல இராஜதந்திர முடிவுகளில் செந்தில் தொண்டைமானின் பங்களிப்பு காணப்படுகிறது. இவ்வாறு சமூகத்துக்காக எண்ணிலடங்காத பல சேவைகளை முன்னெடுத்து வரும் தமிழ் தலைவர்களில் வலிமை மிக்க தலைவராக செந்தில் தொண்டைமான் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் வி.ஜே.பி. சந்தோசம் அவர்களால் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி வைக்கப்பட்டது.

இந்தியாவை உலகளவில் வியந்து பார்க்க வைத்த ஒரு தமிழராய் அறிவியலாளராய் சந்திராயன்-3 விண்கலத்தை நிலவின் தென் துருவத்தில் தரையிறக்கி தடம் பதித்த அறிவியலாளர் வீரமுத்து வேல் மற்றும் தனது இளம் வயது முதல் தற்போது வரை ஜவுளித் துறையில் சாதனைப்படைத்து, தேசிய விருதுகளை வென்று,தொழிலதிபராக திகழ்ந்து, 1000 மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கி இளைஞர்களுக்கு முன்னோடியாக திகழும் நல்லி குப்புசாமி செட்டியார் ஆகியோருக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டன.

வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு தமிழக முதல்வர் மு. க ஸ்டாலின் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.



# தொழில் வழங்குனராக வளர்ச்சியடையும் கல்விக்கு நாம் எல்லோரும் மாறவேண்டும்

## கிழக்கின் கேடயத்தின் தலைவர் சபீஸ் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர் )

நாம் முயற்சிக்காதவிடத்து எந்த மாற்றமும் நிகழாது. மாற்றத்துக்கான முதல் அடியை எடுத்து வைக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம். சுயமாக தொழில் தொடக்கி பலருக்கு தொழில் வழங்குனராக மாறும் கல்வி முறையில் நாம் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும்.

அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்களின் முன்னாள் தலைவரும் கிழக்கின் கேடயத்தின் தலைவருமான எஸ்.எம். சபீஸ் இவ்வாறு தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச இளைஞர்கள் சந்திப்பு கிழக்கின் கேடயம் நாவிதன்வெளி கிளைத் தலைவர் ஏ.எல்.எம். அர்சாத் தலைமையில் நடைபெற்றது. அங்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

நாம் முயற்சிக்காதவிடத்து எந்த மாற்றமும் நிகழாது. மாற்றத்துக்கான முதல் அடியை எடுத்து வைக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.

இன்னொருவருக்கு அநியாயம் செய்யாமல் தமது வாழ்க்கைக்குத் தேவையான வருமானத்தைத் தேடிக் கொள்வது கல்வியின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். வாலிப வயதில் கல்வியைத் தவிர வேறு எந்த சிந்தனைக்கும் இடம்கொடுக்கக் கூடாது. அதே நேரம் சுயமாக தொழில் தொடக்கி பலருக்கு தொழில் வழங்குனராக மாறும் கல்விமுறையில் நாம் எல்லோரும் கவனம் செலுத்த வேண்டும்.

அத்தோடு சமூக அக்கறை கொண்டவர்களாகவும் நாம் இருக்க வேண்டும். உங்களில் இருந்து நல்ல தலைவர்கள் உருவாகி நமது மக்களை நன்றாக வாழவைக்க கூடியவர்களாக மாற வேண்டும். இன்று நாம் நமது மக்கள் படுகின்ற துன்பங்களுக்கு மூல காரணம் சரியான தலைவர்களை நாம் உருவாக்க தவறியமைதான். ஆகவே அதிலும் நாம் கவனத்துடன் அக்கறை செலுத்த வேண்டும்.-என்றார்.

## சாம்பல்தீவு த.ம.வியில் நிலவும்

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரிக்கை

( கிண்ணியா )

சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட சாம்பல் தீவு தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது என்று பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதைத் தவிர்த்து வருகின்றனர்.

முதலாம் ஆண்டு தொடக்கம் 13 ஆம் ஆண்டு கலைப் பிரிவு வரைக்கும் இயங்கும் இந்தப் பாடசாலையில் கடந்த சில மாதங்களாக முக்கிய பாடப் பிரிவுகளுக்கு ஆசிரியர் இல்லை என்று பெற்றோர் தெரிவித்துள்ளனர். இதுவரைக்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என்றும் கூறுகின்றனர்.

தரம் மூன்றாம் வகுப்புக்கு இதுவரை வகுப்பாசிரியர் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் கலை பிரிவில் உள்ள தமிழ் மொழி பாடத்துக்கு உரிய ஆசிரியரும் இதுவரைக்கும் இல்லை என தெரிவிக்கின்றார்.

இந்த நிலைமையை உடனடியாக மாற்றி உடனே மாணவர்களின் நலன் கருதி உரிய பாடத்துக்கான ஆசிரியரை நியமித்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# வெள்ளத்தால் சேதமடைந்த வீதிகளால் மக்கள் போக்குவரத்துப் பெரும் பாதிப்பு

(கே. எ. ஹமீட் )

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அமைந்துள்ள பாலமுனை அரசயடி வீதி, இறா கிராம வீதிகள் அண்மையில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தால் சேதமடைந்துள்ளன.

இதனால் பொது மக்களின் போக்குவரத்து பாதிக்கப் பட்டுள்ளது.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந்தமான இந்த வீதிகளைக் கிழக்கு மாகாண முன்னாள் வீதி அபிவிருத்தி அமைச்சரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ். உதுமாலெப்பை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிக மாகாணப் பணிப்பாளர் அலியார், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் கல்முனை நிறைவேற்று பொறியியலாளர் எம்.எம்.எம். முனாஸ், அக்கரைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகப் பொறியியல் உதவியாளர் உனைஸ், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் பதுர்டீன் ஆகியோர் கள விஜயம் மேற்கொண்டனர்.





# திருமலை மாற்றுத்திறனாளிகளின் மெய்வன்மைப் போட்டி நிகழ்வுகள்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு உடல் உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கான மெய்வல்லுனர் விளையாட்டு போட்டி அண்யைில் மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தம்பலகாமம், மூதூர், கிண்ணியா, கந்தளாய், பட்டினமும் சூழலும், வெருகல், கோமரன்கடவல குச்சவெளி, சேருவில பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள சகன செவன அமைப்பின் மாற்று திறனாளிகள் மற்றும் பட்டினமும் சூழலும் பிரதேசத்தில் உள்ள ஹோப் நிறுவனத்தின் மாற்றுத்



திறனாளிகள் பங்கு பற்றினர். அவர்களால் இயலுமான அனைத்துப் போட்டிகளிலும் பங்குபற்றினர்.

போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாற்றுதிறனாளிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர் த.பிரணவன், பிரதேச செயலகங்களின் சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமூகசேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.








# சிறுதோட்ட, மேட்டு நிலப் பயிர்ச்செய்கையில் ஏற்படும் பிரச்சினை பற்றிக் கலந்துரையாடல்



கிண்ணியா பிரதேசத்தில் சிறுதோட்ட மற்றும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளது பயிர்ச் செய் கையில் ஏற்படும் பிரச்சினைகள் குறித் தும் அதற்கான தீர்வுகள் சம்பந்தமாகவும் கிண்ணியா ஆலங்கேணி விவசாய போதனாசிரியர் பிரிவின் நெடுந்தீவு கிராமத்தில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

கிழக்கு மாகாண விவசாய பணிப்பா ளர் எம்.எஸ்.ஏ. ஹலிசின் அறிவுறுத் தலுக்கு அமைவாக விவசாய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கல் பிரிவுகள் இணைந்து இந்தக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்திருந்தன.

இந்தக் கலந்துரையாடலின் போது, போது பயிர்ச் செய்கையில் ஏற்படும் நோய் பீடைத் தாக்கங்கள், அவற்றை இனம் காணுதல், கட்டுப்படுத்துதல் சம்பந்தமாகவும் விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

அத்துடன் நவீன விவசாய முறைக ளைக் கையாளுதல் விளைச்சல் தரக் கூடிய விதைகளை வாங்குதல் முதலான பல விடயங்கள் தொடர்பில் விவசாயி களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

நிலாவெளி மேற்கு உதவி விவசாய பணிப்பாளர் சி.ஆர்.டி.துஷ்யந்தி, ஆலங்கேணி விவசாய போதனா ஆசிரியர் ஏ.எம்.எம். மன்சூர் ஆகியோ ரும் இதில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வளவாளர்களாக கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலை யத்தின் மேலதிகப் பணிப்பாளர் எஸ். ராஜேஷ்கண்ணா, திருகோணமலை மாவட்ட விவசாய பணிப்பாளர் டி. கருணை நாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# ஆலையடிவேம்பு பால் பண்ணையாளர் அலுவலகம் அக்கரைப்பற்றில் திறப்பு!

(எம்.எம்.றம்ஸீன்)

ஆலையடிவேம்பு கால்நடை பால் பண்ணையாளர் விவசாய கூட்டுறவுச் சங்கத்தின் அக்கரைப்பற்று அலவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்துக்கு சொந்தமான கட்டடம் ஒன்றிலேயே இதற்கான அலுவலகம் பல வருடங்களுக்குப் பின்னர் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் சி.விக்னேஸ்வரன் தலைமையில் சங்கத்தின் பிரத்தியேக செயலாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான சோ.புஸ்பராஜாவின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.



ஆலையடிவேம்பு பிரதேச கால் நடை வைத்திய அதிகாரி திருமதி ரி.கோகுலதாஸ் மற்றும் சமுர்த்தி முகாமையாளர் சீலன், ஆலய தலைவர்கள், சங்கத்தின் முன்னாள் தலைவர்கள், உறுப்பினர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.




# கற்பிட்டியில் இடம்பெற்ற மகளிர் தின நிகழ்வு!

(எம்.எச்.எம் சியாஜ்)

“பெண்களில் முதலீடு செய்வோம் முன்னேற்றத்தை துரிதப்படுத்தவோம்” என்ற கருப் பொருளுக்கு அமைய கற்பிட்டி மனிதாபிமான சகோதரத்துவ நிறுவனத்தின் வளாகத்தினுள் நிறுவனத்தின் செயற்றிட்டப் பணிப்பாளரும் நிறைவேற்றுக் குழுவின் பொதுச் செயலாளருமான ஏ.எம்.எம் மஸர் தலைமையில இடம்பெற்றது.



இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மனிதாபிமான சகோதரத்துவ நிறுவனத்தின் தேசிய தலைவர் கலாநிதி எஸ். பத்மராஜா கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டப்யூ.எஸ் எதிரிசிங்க, எச்.பி.எப். நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் உப தலைவர் அல்ஹாஜ் வை.எம்.எஸ் ஹமீத் , ஆகியோருடன் விசேட அதிதிகளாக கற்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் மஞ்சுளா, கற்பிட்டி பிரதேச கிராம உத்தியோகத்தர்களான றியாஸ், சஹீனாஸ்,விந்தா , தில்லையூர் மீனவ சங்க தலைவர் சபுருல்லாஹ்கான், கற்பிட்டி பிரதேச மகளிர் அபிவிருத்தி கூட்டுறவு சங்க தலைவி கே.றுவைஸா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பெண்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பொருளாதார, பால்நிலை, அச்சுறுத்தல்கள், வன்புணர்வுகளுக்கு உட்படுதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் அதற்கான தீர்வுகளை எவ்வாறு பெற்றுக் கொள்ளல் அதற்கான வழிமுறைகள் என்ன மற்றும் சுய முயற்சி அபிவிருத்தி குழுக்களை உருவாக்கி பொருளாதார ரீதியில் முன்னேறத்தை நோக்கி எவ்வாறு பயணித்தல் என்பன பற்றிய கலந்துரையாடல்களும் இதன்போது இடம்பெற்றன.




# கடற்றொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் வழங்கல்

(த.சுபேசன்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தால் காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஜே-44 ஊரி கிராமத்தில் கடற்றொழிலில் ஈடுபடும் பெண்களுக்குக் கடற்றொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

“பெண்களில் முதலீடு செய்வோம் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவோம்” எனும் தொனிப்பொருளில் சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையப் பணிப்பாளர் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாகக் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளரும் பெண்கள், சமூக செயற்பாட்டாளருமான உதயனி நவரட்ணம், காரைநகர் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர், காரைநகர் பிரதேச செயலக உளவளத் துறை உத்தியோகத்தர்கள், ஜே - 44 ஊரி கிராமத்தின் கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தால் முதற்கட்டமாக கிராமத்தில் கடற்றொழிலில் ஈடுபடும் தெரிவு செய்யப்பட்ட 5 பெண்களுக்கு தலா நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலை உள்ளிட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் ஊரி கிராம பெண்களுக்கு இடையே போட்டிகளை நடாத்தி வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

ஊரி கிராமத்தில் 210 குடும்பங்கள் உள்ள நிலையில் அதில் பெரும்பாலான பெண்கள் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# ஆஸ்திரேலியா - இலங்கை கல்வி நிதியத்தின் உதவி பெற்ற கிழக்கு, மலையக மாணவர்கள்

ஆஸ்திரேலியாவில் இருந்து கடந்த 36 வருடங்களாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் நிதி அனுசரணையில், மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களிலும் மலையகத்தில் நுவரேலியா மாவட்டத்திலும் வதியும் ஆதரவற்ற மாணவர்களுக்கான நிதி உதவி வழங்கல் நிகழ்வுகள் அண்மையில் பாண்டிருப்பிலும் நானுஓயாவிலும் நடைபெற்றன.

கல்வி நிதியத்தின் கிழக்கு மாகாண தொடர்பாளர் அமைப்பான ஆதரவற்ற மாணவர் கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் தலைவர் முன்னாள் அதிபர் ந. கமலநாதன் தலைமையில் பாண்டிருப்பிலும், மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் அதிபர் அரியமுத்து தலைமையில் நானுஓயாவிலும் நடைபெற்றது.

இலங்கையில் வாழ்க்கைச்செலவு அதிகரித்திருப்பதை கல்வி நிதியம் கவனத்தில் கொண்டிருப்பதால், இவ்வாண்டு (2024) முதல் மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

தந்தையை இழந்து வறுமைக் கோட்டின் கீழ் வதியும் தமிழ் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா வீதம், முதல் காலாண்டுக்கான நிதிக்கொடுப்பனவு தற்போது வழங்கப்பட்டது.

இந்நிதி உதவியானது கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம், உள்நாட்டுப்போர், மற்றும் காரணங்களால் தந்தையை இழந்து ஆதரவற்ற நிலையில் தமது பாடசாலைக் கல்வியை தொடரச் சிரமப்படுகின்ற மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் வழங்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு, அவர்களது பாடசாலைக் கல்வியைப் பூரணப்படுத்தும் வரை (தரம்–1 முதல் க.பொ.த உயர்தரம் வரை ) தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தில் பதிமூன்றாவது வருடமாக தொடரும் இந்நிகழ்வில் இவ்வாண்டின் முதற் காலாண்டுக்கான நிதி உதவியை பதினேழு பாடசாலை மாணவர்களுடன் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி மாணவியும் பெற்றுக் கொண்டார்.

மலையகத்தில் நுவரேலியா மாவட்டத்தில் ஐந்து பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்நிதியுதவியை கடந்த 2019 ஆம் ஆண்டு முதல் பெற்று வருகின்றனர்.

ஆஸ்திரேலியாவில் வதியும் தமிழ் அன்பர்களின் ஆதரவுடன் இயங்கும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் வடக்கு, கிழக்கு, மேற்கிலங்கை, மலையக மாணவர்களுக்கு கடந்த 36 வருடங்களாக உதவி வருகின்றது.

கடந்த காலங்களில் இந்நிதியத்தின் உதவி பெற்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள், பல்கலைக்கழக கல்வி உட்பட உயர்கல்வியை தொடர்ந்து தொழில் வாய்ப்புகளை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.










# பட்டிப்பளையில் இடம்பெற்ற மகளிர் தினப் பேரணி!

(பழுவூரான்)

"அவளுடைய பலம் நாட்டிற்கு முன்னேற்றம்" எனும் தொனிப் பொருளில் மகளிர் தின நிகழ்வு மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் பிரதேச செயலாளர் எஸ்,சுதாகரின் வழிகாட்டலில் நடைபெற்றது.

இதன்போது "போதைப் பாவனையைத் தடை செய்வோம்" எனும் தொனிப் பொருளை வலியுறுத்திப் பெண்கள் ஒன்றிணைந்து நடத்திய பேரணி கொக்கட்டிச்சோலைச் சந்தியில் இருந்து பட்டிப்பளை பிரதேச செயலகத்தை சென்றடைந்தது.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி புவிக்குமார் மேனகாவின் தலைமையில் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமையாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கொக்கட்டிச்சோலை மாவடிமுன்மாரி சமுர்த்தி வங்கி வலய பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சி.பி.ஓ. அபிவி ருத்தி உத்தியோகத்தர் மற்றும் கொக்கட் டிச்சோலை சமுர்த்தி வங்கியின் கட்டுப் பாட்டுச் சபை தலைவர், நிர்வாக உறுப்பினர்கள், சி.பி.ஓ.தலைவர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# அம்பாறை சுகாதார அதிகாரி பிரிவில் சிறுநீரக நோய் தொடர்பான கண்காட்சி

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கான சிறுநீரக நோய் தொடர்பிலான கண்காட்சி அம்பாறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் அம்பாறை பொது வைத்தியசாலை சிறுநீரக விசேட வைத்திய நிபுணர் திருமதி நியோமியின் வழிகாட்டலில் அம்பாறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தனுஷ்கவின் தலைமையில் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இந்த கண்காட்சியை வைபவரீதியாக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பொத்துவில், அக்கரைப்பற்று, அம்பாறை, தெஹியத்த கண்டிய, மகாஓயா போன்ற பல்வேறு வைத்தியசாலைகளை சேர்ந்த வைத்திய நிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் சிறுநீரக நோய் தொடர்பிலான தமது காட்சிப் பொருள்களைக் காட்சிப்படுத்தியிருந்தனர்.

அதில் சிறுநீரக தொழிற்பாடுகள், நோய் நிலைகள், குணப்படுத்த செய்ய வேண்டிய மருத்துவ விடயங்கள் தொடர்பில் நிறைய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்த கண்காட்சி ஆரம்ப நிகழ்வில் அம்பாறை பிராந்திய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் விபுல சந்திரஸ்ரீ உட்பட முக்கிய பிரமுகர்கள், மருத்துவ துறை சார் அதிகாரிகள், அம்பாறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய உத்தி யோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# மன்னாரில் தென்னை மரங்களைத் தாக்கும் வெண் ஈ நோயைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

(மன்னார்)

வடக்கு மாகாணத்தில் தென்னை மரங்களில் ஏற்பட்டுள்ள 'வெண் ஈ நோய்' தாக்கம் மன்னார் மாவட்டத்திலும் குறிப்பாக மன்னார் தீவுப் பகுதியில் அதிகரித்து காணப்படுகிறது.

இந்த நோயை கட்டுப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் பயிர் பாதுகாப்பு சேவை நிலைய அதிகாரிகள் நேற்று வெள்ளிக்கிழமை (15) மன்னாருக்கு வருகை தந்து மன்னாரிலும் இந்த நோய் தாக்கம் தொடர்பாகத் தெளிவுபடுத்தி கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

மன்னார் மாவட்டச் செயலகத்தின் வளாகத்திலும் நோய் தாக்கத்துக்கு உள்ளான தென்னை மரங்களில் நோய் தாக்கத்தை கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகள் விடப்பட்டன.

மன்னார் மாவட்ட செயலகத்தில் இந்த நோயின் தாக்கம் தொடர்பிலும் வருகை தந்த அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டது.



மன்னார் நகரப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட கிராமங்களிலும், தலைமன்னார் பகுதியிலும் இந்த நோயைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணிகள் தென்னை மரங்களில் விடப்பட்டுள்ளன.

தென்னை மரங்களில் ஏற்படும் நோய் தாக்கம் ஏனைய மரங்களுக்கும் பரவும் அபாயம் காணப்படுவதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக பயன் தரும் மரங்கள் முற்று முழுதாக தனது பயன் பாட்டை இழக்கும் நிலை காணப்படுகின்றது.

இந்த நடவடிக்கைக்காக பயிர் பாதுகாப்பு சேவை நிலைய மேலதிக பணிப்பாளர் பிரபாத் நிஷாந்த, விவசாய ஆராய்ச்சி நிலைய திருநெல்வேலி உதவி பணிப்பாளர் ஸ்ரீ.ராஜேஷ் கண்ணா மற்றும் மன்னார் மாவட்ட விவசாய பணிப்பாளர் அ.சகிலா பானு, பிரதேச செயலாளர், திணைக்கள பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# சுற்றாடல் சார் நடவடிக்கைகளில் மாணவர் ஈடுபடுவதற்கு அனுமதி

(எம்.எம்.றம்ஸீன்)

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி மற்றும் சண்முகா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் சுற்றாடல் முன்னோடி கழக மாணவர்கள் காரைதீவு பிரதேச செயலகத்துடன் இணைந்து சுற்றாடல் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதற்காக காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜனை அண்மையில் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன் போது இந்தப் பாடசாலை மாணவர்களுக்கு சுற்றாடல் நடவடிக்கைகளை தொடர்வதற்கான அனுமதிக் கடிதங்களை அவர் வழங்கினார்.





## பேரிடர்கால மனிதநேயம்:

# சைப்ரஸில் இருந்து காசா செல்லும் உதவிக் கப்பல்!

# 2009 இல் வன்னி நோக்கி வந்த வணங்கா மண்!!

● **நவீனன்**

ஆங்கிலேயருக்கு பணியாது போரிட்ட பண்டார வன்னியன் வாழ்ந்த வணங்கா மண்ணே வன்னி மண்ணாகும். இந்த வன்னியில்தான் ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் முழு உலகமே தமிழ் மக்களை கைவிட்டதும் வரலாறாகியது.

அன்று உலகமே கைவிட்டாலும், புலம்பெயர் தமிழ் உறவுகள் தாயக மண்ணை மறக்கவில்லை. 2009 மார்ச்சில் தமிழ் உறவுகளின் உயிர் காப்பதற்கான தாயகம் நோக்கி பயணித்த கப்பலே வணங்கா மண் கப்பலாகும். முல்லைத்தீவு நோக்கி பிரித்தானிய துறைமுகம் ஒன்றில் இருந்து புறப்பட்ட இந்தக் கப்பல் போர் முடிந்து பல வாரங்களின் பின்னரே இந்தியப் பெருங்கடலுக்கு வந்தடைந்தது.

இன்று கொடும் பஞ்சத்தின் விளிம்பில் பாலஸ்தீனத்தில் இருக்கும் காசாவுக்கு உதவிகளை விநியோகிப்பதற்காக, சைப்ரஸ் துறைமுகத்தில் இருந்து கப்பல் காசாவை நோக்கி புறப்பட்டுள்ளது.

காசாவுக்கு உதவிகளை விநியோகிப்பதற்கான புதிய கடல் பாதை ஒன்றை ஏற்படுத்தும் முன்னோடித் திட்டமாக, சைப்ரஸ் துறைமுகத்தில் இருந்து இருநூறு தொன் உணவு பொருள்களை ஏற்றிய கப்பல் ஒன்று மார்ச் 12 காசாவை நோக்கி புறப்பட்டது. காசாவின் வட மேற்காக 320 கிலோ மீற்றர் தொலைவிலேயே சைப்ரஸ் நாடு உள்ளது.

போரால் பாதிக்கப்பட்டு, பஞ்சத்தின் விளிம்பில் இருக்கும் காசா நகருக்கு உணவுப் பொருட்கள் மற்றும் குடிநீர், மருந்துப் பொருட்கள் ஆகியவை சைப்ரஸ் நாட்டின் துறைமுகத்திலிருந்து கடல் வழியாக தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**உணவு இன்றிய நோன்பு**

காசாவில் போர் நிறுத்த முயற்சிகளில் இழுபறி நீடிக்கும் நிலையில் இஸ்ரேலின் தாக்குதலுக்கு மத்தியிலேயே அங்குள்ள மக்கள் ரமழான் நோன்பை பிடித்து அனுஷ்டித்து வருகின்றனர். காசா மக்களில் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் தெற்கு நகரான ரபாவில் உள்ளவர்களும் இடம் பெயர்ந்து உள்ளனர். அங்கு வாழும் மக்கள் பொதியில் அடைக்கப்பட்ட உணவு மற்றும் அவரை விதைகளைக் கொண்டு நோன்பு துறந்ததாக கான்யூனிஸில் இருந்து அங்கு இடம்பெயர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு மகிழ்ச்சியான ரமழானாக இம்முறை உணரவில்லை. மக்கள் குளிருக்கு மத்தியில் கூடாரங்களில் இருக்கிறார்கள். இம்முறை ரமழான் இரத்த வாடையுடன் துன்பம், பிரிவு மற்றும் ஒடுக்குமுறையை சுவைக்கிறோம் என்று கான் யூனிஸில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தெரிவித்தனர்.

காசாவில் தற்காலிக துறைமுகம்

காசாவில் துறைமுகக் கட்டமைப்பு ஒன்று இல்லாத போதும், அழிக்கப்பட்ட கட்டிடங்களின் இடிபாடுகளை பயன்படுத்தி இறங்குதுறை ஒன்றை உருவாக்கவிருப்பதாகத் தொண்டு நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

தற்போது காசா கடலோரப் பகுதியில் தற்காலிக துறைமுகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இப்போது காசா மக்களுக்கு உணவு மற்றும் மருந்து பொருள்களைச் சேகரித்த ஸ்பெயின் நாட்டின் “ஓப்பன் ஆர்ம்ஸ்’ (ழுிநெ யுசஅள) என்ற அமைப்புக்குச் சொந்தமான கப்பல் காசாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

‘ஓபன் ஆர்ம்’ என்ற ஸ்பெயினின் தொண்டு நிறுவனத்தின் இந்தக் கப்பல் அரிசி, மாவு மற்றும் உணவு பொருள்களை ஏற்றி சைப்ரஸின் லர்னாகா துறைமுகத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்துள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஐரோப்பாவிலிருந்து காசாவுக்கு நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது இதுவே முதல் முறையாகும். இந்தத் திட்டத்துக்கு ஐக்கிய அரபு இராச்சியமே அதிக நிதி உதவி அளித்திருப்பதோடு, ஸ்பெயின் தொண்டு நிறுவனம் கப்பலை வழங்கியுள்ளது.

காசாவில் குறிப்பாக வடக்கு காசாவுக்கான உதவிப் பொருள்கள் செல்வதை இஸ்ரேல் தொடர்ந்து தடுத்து வரும் சூழலில் அங்கு ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக மக்கள் உயிரிழந்து வருகின்றனர். காசாவில் பஞ்சம் ஏற்படுவது பற்றி ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உதவி அமைப்புகள் எச்சரித்து வருகின்றன.

இஸ்ரேலின் கடல்வழி முற்றுகை

காசாவில் கடந்த ஒக்டோபர் ஏழாம் திகதி போர் வெடித்தது தொடக்கம் அந்தப் பகுதியை வெளியுலகில் இருந்து இஸ்ரேல் முடக்கி இருக்கும் நிலையிலேயே அங்கு நேரடி உதவி விநியோகத்திற்கு தொண்டு நிறுவனங்கள் முயன்றுள்ளன.

இஸ்ரேல் ராணுவத்தினரின் தொடர் தாக்குதலால் நிலைகுலைந்து போயுள்ள காசா நகரில் மக்கள் கடும் நெருக்கடியில் வாழ்ந்து வருகின்றனர்.

உணவு, குடிதண்ணீர், மருந்துப் பொருள்கள் போன்ற அத்தியாவசியமான பொருள்கள் எதுவுமின்றியும், மின்சாரம் இல்லாமலும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

உணவு இல்லாததால் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ள அந்த மக்களுக்கு தற்போது தரை வழியாகவும், வான் வழியாகவும் அளிக்கப்பட்டு வரும் நிவாரணப் பொருள்கள் போதுமான அளவில் இல்லை.

இதனாலேயே சைப்ரஸில் இருந்து மேலும் ஐந்நூறு தொன் உதவிகள் திரட்டப்பட்டுள்ளன என்றும் அவைகளும் காசாவுக்கு அனுப்பப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கடல் திட்டம் வெற்றி அளித்தால், 2007 ஆம் ஆண்டு

**(17ஆம் பக்கம் பார்க்க)**

# சைப்ரஸில் இருந்து காசா செல்லும் உதவிக் கப்பல்! 2009 இல் வன்னி நோக்கி வந்த வணங்கா மண்!!

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

காசாவில் ஹமாஸ் ஆட்சியை கைப்பற்றிய பின்னர் இஸ்ரேல் அந்தப் பகுதி மீது கொண்டுவந்த கடல்வழி முற்றுகையை மீறும் முதல் சம்பவமாகவும் இது இருக்கும்.

**2009 வன்னி நோக்கிய வணங்கா மண் கப்பல்!**

வன்னியில் இறுதிக்கட்ட போரில் முழு உலகமே தமிழ் மக்களை கை விட்ட பின், எம் உறவுகளின் உயிர் காப்பதற்கான தாயகம் நோக்கிய பயணமே "ஒப்பரேஷன் வணங்கா மண்" எனப்படும். புலம் பெயர்ந்த உறவுகளால் ஈழத்து உறவுகளுக் கான உணவு மற்றும் உயிர்க்காப்பு மருந்துகளுடன் தாயகம் நோக்கிய பயணத்திற்கு "வணங்கா மண்" ஒருங்கிணைப்பு குழு லண்டனில் தீவிரமாகச் செயற்பட்டது.

வன்னி யுத்த நடவடிக்கையில் என்றுமில்லாதவாறு உணவு ஆயுதமாக பாவிக்கப்பட்டது. இதற்கு ஐ.நா. முதல் உலகநாடுகள் அனைத் துமே எம்மக்களை கைவிட்டு வேடிக்கை பார்த்தது. இந்நிலையில் எம் வன்னி உறவுகளுக்காக பிரித் தானிய தமிழர்களால் "வணங்கா மண்" நடவடிக்கை 2009 மார்ச் முதல் பிரித்தானியாவில் பல்வேறு இடங்களில் பொருள்கள் சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

**ஒப்பரேஷன் வணங்கா மண்**

ஒருபுறம் குண்டுமழையில் சாவுக்குள் வாழும் மக்களை பட்டி யால் சாவு கொள்ள விடுவோமா, அல்லது குண்டுகளால் எம்மினம் அழிய விடுவோமா, உலக அரசுகள் கைவிட்டால் என்ன செய்வது என பல ஐயங்கள் அப்போது எழுந்தன. ஆனாலும் வன்னி நோக்கி 'வணங் கா மண்' கப்பல் பல்வேறு சிரமங்கள் மத்தியில் பிரித்தானியாவில் இருந்து அத்தியாவசியப் பொருள்களையும் மருந்துவகை மற்றும் குழந்தைக ளுக்கான பால்மா பொருள்களுடன் நேரடியாக முல்லைத்தீவு துறைமுகம் செல்ல திட்டமிடப்பட்டது. இதனா லேயே இந்த நடவடிக்கைக்கு "ஒப் பரேஷன் வணங்கா மண்" (Operation Vananga Mann - Vanni Mission ) என பெயரிடப்பட்டது.

சட்டச் சிக்கல்கள், கடல் வழிப் பயண அனுமதி, பயணிப்பவர்கள், மாலுமிகள் மற்றும் சர்வதேச அங்கிகாரத்துடனான பாதுகாப்பு என பல இடர்கள் வந்த போதும், இக்கப்பலில் உலர் உணவுப் பொருள் களை கொண்டு செல்ல முன்னெ டுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையில் பிரித்தா னிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவுடன் பல பொருள்கள் சேகரிக் கப்பட்டன. மருந்துப் பொருள்கள் உலர் உணவுப் பொருள்கள் என்பன சேகரிக்கப்பட்டன. இந்த நடவடிக் கைக்கு பிரித்தானிய பொதுஸ்தாபன ஆணையகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட Tamil Aid, Tamils u;ealth Organisation, The Tamils Support Foundation, Technical Association of Tamils ஆகிய அமைப்புகள் உதவிகளை வழங் கின.

அத்துடன் இந்த வணங்கா மண் நடவடிக்கையில் சர்வதேச ஊடக வியலாளர்களையும் இந்தக் கப்பலில் ஏற்றிக் கொள்ள வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டது.

போர் தீவிரமாக நடைபெறு கையில் வணங்கா மண் கப்பல் முல்லைத்தீவுத் தரையை தொடுமா என்பது ஒரு பகல் கனவாகவே இருந்தது. அதேவேளை வணங்கா மண் கப்பல் இலங்கைக் கடற் பரப்பிற்குள் நுழைய அனுமதிக் கப்படுமா என்பதே முக்கிய கேள் வியாக இருந்தது.

**கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்**

இலங்கை இராணுவத்தின் கண் மூடித்தனமான ஷெல் தாக்குதல்கள், சர்வதேச ரீதியில் தடைசெய்யப்பட்ட கொத்துக் குண்டுகள் மற்றும் வெடிகுண்டுகளைப் பயன்படுத்தி, பாதுகாப்பான வலயத்திற்குள் உள்ள பொதுமக்கள் குடியிருப்புகளை குறிவைத்து தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டது. இக்கோரமிகு காலமான மார்ச் 2009 வன்னியில் கைவிடப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க புலம்பெயர் மக்கள் முன் நின்றனர்.

சர்வதேச சமூகத்தின் மனசாட்சி யால் கைவிடப்பட்ட வன்னி மக்க ளுக்கு உணவு மற்றும் மருந்துகளை எடுத்துச் செல்லும் கருணைப் பணி ஏற்பாட்டில் அவுஸ்திரேலியா, நோர் வேயின் மருத்துவ நிபுணர்களிட மிருந்து நிவாரண முயற்சிகள் மற்றும் தன்னார்வ சேவைகளை கோரப்பட்டன.

ஆஸ்திரேலியா மற்றும் நோர் வேயில் உள்ள தொண்டு நிறுவ னங்களால் விடுக்கப்பட்ட கோரிக் கைகளுக்கு இலங்கை பாதுகாப்பான வழியை வழங்காததால் புலம் பெயர்ந்த தமிழர்கள் அப்பணியை தாமாகவே ஏற்றுக் கொண்டனர்.

**சென்னையில் நிறுத்தப்பட்ட வணங்காமண் கப்பல்**

வன்னியில் இறுதிப் போர் முடி வுற்று சுமார் 3 லட்சம் மக்களுக்கு மேல்அகதிகளாகதிறந்தவெளிகளில் அடைக்கப்பட்டனர். அவர்களுக்கு வேண்டிய மருந்து மற்றும் அத்தியாவசிய பொருள்களை ஏற்றிய கப்பல் நேரடியாக பொருள் களை வன்னியில் கொண்டு சென்று இறக்க முடியவில்லை.


இதற்கு முன்பாக தமிழ் நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட பொருள்களையே சிங்கள அரசு தானே பொறுப்பேற்று அரை குறையாக விநியோகித்தது.

வன்னி தமிழர்களுக்கு உதவுதற் காக வெளிநாட்டு தமிழர்கள் உணவு, மருந்து உள்ளிட்ட நிவாரண பொருள்களுடன் 'வணங்காமண்' கப்பலுக்கு இலங்கை அரசு அனுமதி மறுத்ததால் 25 ஜூன் 2009 அந்த கப்பல் சென்னை அருகே நிறுத்தப் பட்டது.

இந்த கப்பலை இலங்கையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கும்படி, இந்திய மத்திய அரசுக்கு தமிழக முதல்வர் கருணாநிதி கடிதம் எழுதி வேண்டினார். அப்போது இலங் கையில் இருந்து டில்லி வந்திருந்த ராஜபக்ஷ அரசின் உயர் மட்டக் குழுவினர், வணங்காமண் கப்பலை இலங்கைக்குள் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். எம்.கிருஷ்ணாவிடம் உறுதியளித் தனர்.

இதற்கிடையே தமிழ்நாடு சட்ட சபையில் வணங்காமண் கப்பல் பற்றிய கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இலங்கை தமிழர்களுக்கு நிவாரண பொருள் களை ஏற்றிச் சென்ற வணங்காமண் கப்பலை இலங்கை அரசு அனு மதிக்கவில்லை. பின்னர் தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் அடிப்படையில் அந்த கப்பலை இலங்கைக்கு அனுப்ப மத்திய நடவடிக்கை மேற்கொண்டது.

இலங்கையில் மீதம் இருக்கும் தமிழர்களை காப்பாற்ற அனைத்துக் கட்சிகளும் ஒன்றுப்பட்டு செயல்பட வேண்டும் என்று தமிழ்நாடு சட்ட சபையில் கருணாநிதி கோரினார். அத்துடன் சர்வதேச சட்ட வல்லுனர் களை பயன்படுத்தி ஒரு சுயாதீன குழுவை அனுப்பி வன்னிக்குள் அரங்கேறும் இன அழிப்பு நிகழ்வு களை வெளிக்கொண்டுவந்து சர்வ தேசத்துக்கு பகிரங்கப் படுத்தி னாலேயே தமிழ் மக்களின் பிரச்சி னைகளைத் தீர்க்கலாம் எனவும் தமிழ்நாடு சட்ட சபையில் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.





# சந்நிதியான் ஆச்சிரமத்தில் நேற்று பண் இசைக் கச்சேரியும் உதவிகளும்

யாழ்ப்பாணம் வடமராட்சி சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையால் வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்படும் நிகழ்வில் நேற்று (15) இறை இசை விருந்தாக இராமநாதன் அரங்காற்றுகை கட்புலக் கலைகள் பீட 4 ஆம் வருட மாணவி சிவநாதன் சிவஸ்ரிகாயாவின் இறை இசை கச்சேரி இடம் பெற்றது.

இதில் வயலின் இசையை ஸ்ருதி வேந்தன் அ. ஜெயராமன், மிருதங்க இசையை கலாவித்தகர் க. சிவகுமார் ஆகியோர் வழங்கியிருந்தனர்.

அத்துடன் சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஏழாலை சைவமகாஜன வித்தியாலயத்தில் தரம் – 08 மற்றும் தரம் – 11 இல் கல்வி கற்கும் இரு மாணவர்களுக்கு ஒரு லட்சத்து 5 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் தொண்டைமானாறு ஜே - 386 – கெருடாவில் வடக்கு, ஜே -385 – கெருடாவில் தெற்கு, ஜே – 383 – தொண்டைமானாறு தெற்கு கிராம சேவகர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட சிறுவர், கர்ப்பிணி தாய்மார்கள் உள்ளடங்களான 26 குடும்பங்களுக்கு ஒரு லட்சத்து 56 ஆயிரம் ரூபா பெறுமதியான பங்குனி மாதத்துக்கான சத்துணவுப் பொதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் சந்நிதியான் சைவ கலாசார பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், தொண்டர்கள், பக்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கோவில் புளியங்குளம் கிராமசேவையாளர் பிரிவில் அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் 70 மாணவர்களுக்கும், கணேசபுரம் கிராமசேவையாளர் பிரிவு அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் 65 மாணவர்களுக்கும் சீருடை துணிகளும் அதற்கான தையல் கூலிக்குமாக ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டது.






# காங்கிரஸ் கட்சியை ஒழிப்பதே கேரளாவை காப்பதற்கான தீர்வு

## திருவனந்தபுரத்தில் பிரதமர் மோடி உரை




"காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகளை ஒழிப்பதுதான் கேரளாவைக் காப்பாற்றுவதற்கான ஒரே தீர்வு. இடதுசாரிகளும், காங்கிரஸும் மாநிலத்தில் எதிரிகள் போல் நடிக்கிறார்கள். ஆனால் டில்லியில் ஒருவரையொருவர் கட்டிப் பிடித்து கொள்கின்றனர்."

– இவ்வாறு பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

திருவனந்தபுரத்தில் பா.ஜ.க. பொதுக் கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி,

"கடந்த தேர்தலில் கேரள மக்கள் எங்களை இரட்டை இலக்க வாக்கு சதவீத கட்சியாக மாற்றினார்கள். இந்த தேர்தலில் இரட்டை இலக்க சீட்களை வழங்கும் நாள்கள் வெகு தொலைவில் இல்லை.

கேரளத்தில் ஆட்சி செய்த ஊழல் மற்றும் திறமையற்ற அரசுகளால் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர். இடதுசாரி மற்றும் காங்கிரஸ் அரசாங்கங்கள் ரப்பர் விவசாயிகளின் அவல நிலையை கண்டும் காணாமலும் விட்டுவிட்டன. கேரளாவில் சட்டம் ஒழுங்கு மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

தேவாலய பாதிரியார்கள் கூட பாதுகாப்பாக இல்லை என்பது மிக துரதிர்ஷ்டவசமானது. மேலும், கேரள கல்லூரிகள் கொம்யூனிஸ்டுகளின் குண்டர்களின் மையங்களாக மாறி விட்டன. பெண்கள், இளைஞர்கள் என கேரளாவில் உள்ள ஒவ்வொரு பிரிவினரும் அச்சத்தில் வாழ்கின்றனர். ஆனால், மாநிலத்தை ஆளுவோர் நிம்மதியாக உறங்குகிறார்கள்.

காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகளை ஒழிப்பதுதான் கேரளாவைக் காப்பாற்றுவதற்கான ஒரே தீர்வு. இடதுசாரிகளும், காங்கிரஸும் மாநிலத்தில் எதிரிகள் போல் நடிக்கிறார்கள். ஆனால் டில்லியில் அவர்கள் ஒருவரையொருவர் கட்டிப்பிடித்து கொள்கின்றனர். காங்கிரஸ், இடதுசாரிகள் இரண்டுமே குண்டர்கள். கேரள மக்களை ஏமாற்றிவிட்டனர்.

தற்போது கேரள மக்கள், குறிப்பாக இளைஞர்களும் பெண்களும் யதார்த்தத்தை புரிந்து கொண்டுள்ளனர். கேரள மக்கள் முற்போக்கு மற்றும் தொலைநோக்கு பார்வை கொண்டவர்கள். ஆனால் காங்கிரஸ் இன்னும் 19 ஆம் நூற்றாண்டுக்கான எண்ணங்களுடன் வாழ்கிறது.

அதேபோல், இடதுசாரி சித்தாந்தம் முற்றிலும் காலாவதியான சித்தாந்தம். இந்த இரு கட்சிகளின் பொதுவான கலாச்சாரம் கேரள மக்களின் சிறந்த மரபுகள் மற்றும் முற்போக்கு மன நிலைக்கு நேர் எதிரானது. இரு கட்சிகளுமே மக்கள் நம்பிக்கைகளை சீரழிப்பதற்கு பெயர் பெற்றவர்கள்.

அவர்கள் தொடர்ந்து சமூகத்தை சீரழிப்பதிலும் வாக்கு வங்கி அரசியலிலும் ஈடுபட்டு வருகின்றனர். கேரள கலாசாரம் அமைதிக்கு பெயர் பெற்றது. ஆனால் இடதுசாரி மற்றும் காங்கிரஸ் கட்சிகள் அரசியல் வன்முறையில் ஈடுபடுகின்றன.

ஜனநாயகத்தின் மாபெரும் திருவிழாவை விரைவில் காணவிருக்கிறோம். இந்த முறை கேரளாவின் பா.ஜ.க. மீதான அன்பு மிகப்பெரிய ஆதரவாக மாறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்த முறை முந்தைய சாதனைகள் அனைத்தும் முறியடிக்கப்படும் என்று உறுதியாக நம்புகிறேன். இந்த முறை கேரளா பா.ஜ.கவை பெரிதும் ஆதரிக்கும் என்று உறுதியாக நம்புகிறேன்"– என்றார்.

# சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல்; எடியூரப்பா மீது வழக்குப் பதிவு



17 வயதான சிறுமி ஒருவரின் முறைப்பாட்டை அடுத்து, கர்நாடக முன்னாள் முதல்வர் பிஎஸ் எடியூரப்பா மீது பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 2 ஆம் திகதியன்று மேற்படி சிறுமியும் அவரது தாயும் கல்விக்கான உதவி கோரி முன்னாள் முதலமைச்சரின் இல்லத்திற்குச் சென்றபோது எடியூரப்பா சிறுமியை தவறான முறைக்கு உட்படுத்தினார் என முறையிடப்பட்டுள்ளது.

பாரதீய ஜனதாவின் தலைவர் எடியூரப்பா, ஒரு அறையில் சிறுமியை தாகத முறைக்கு உட்படுத்தினார் என பாதிக்கப்பட்ட சிறுமியின் தாய் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், அதனை வெளியில் கூறவேண்டாம் என்று கூறி, பணத்தையும் வழங்கினார் எனவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் நான்கு தடவைகள் முதலமைச்சராக இருந்த 81 வயதான எடியூரப்பா, தம்மீதான குற்றச்சாட்டை மறுத்துள்ளார். உதவி செய்ய சென்று தாம் பிரச்சினைக்கு உள்ளாகியுள்ளேன் என குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சட்டரீதியாக இதனை அனுகப்போகின்றேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் 2025 ஜூன் மாதம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு



"தமிழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் இரண்டாவது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, சென்னையில் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஐந்து நாள்கள் சீரோடும் சிறப்போடும் சிந்தனைச் செயல்திறத்தோடும் மாபெரும் அளவில் நடத்தப்படும்."

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்ட அறிக்கையில்,

"இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்ற முத்தமிழுடன் இன்று கணித் தமிழும் இணைந்து நற்றமிழாக நானிலமெங்கும் சிறப்புடன் திகழ்கின்றது.

தமிழ் மொழி தொன்மை – தனித்தன்மை - பொதுமைப் பண்பு - பண்பாடு – உயர்ந்த சிந்தனை – இலக்கியத் தனித்தன்மை பங்களிப்பு ஆகிய உயர்ந்த கோட்பாடுகள் அனைத்தையும் ஒருங்கே பெற்றதுடன், செம்மொழி என்ற தனித்தகுதியை பெற்றுள்ள அரும்பெரும் மொழியாகும்.

தமிழை, உயர்தனிச் செம்மொழி என்று முதன்முதலில் முன்மொழிந்தவர் தமிழறிஞர் பரிதிமாற்கலைஞர் ஆவார். வளம்பெற்ற நம் மொழிக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத்தந்து தமிழர்களின் நூற்றாண்டுக் கனவை நனவாக்கியவர் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி.

கழக அரசு பொறுப்பேற்ற கடந்த மூன்றாண்டுகளாக தமிழக அரசு தனிப்பெரும் நிலையில் தகுதிவாய்ந்த தமிழறிஞர்களுக்குப் பல்வேறு விருதுகளை வழங்குவதோடு, நாடறிந்த தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமையாக்குவதும், பண்டையத் தமிழர் பண்பாட்டையும், பழங்காலத் தமிழர்களின் எழுத்தறிவு, நாகரிக வாழ்வு முறைமைகளை நுண்மையோடு பறைசாற்றும் வகையில் கீழடி அருங்காட்சியகத்தை அமைத்து, அதன் தொடர்ச்சியாக பொருநை அருங்காட்சியகத்தையும் அமைத்து வருவது தமிழ்ப் பண்பாட்டின் மணிமகுடங்களாகும்.

"இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்பார் பாவேந்தர். நம் உயிருக்கு இணையான தமிழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் இரண்டாம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, சென்னையில் வரும் 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஐந்து நாள்கள் சீரோடும் சிறப்போடும் சிந்தனைச் செயல்திறத்தோடும் மாபெரும் அளவில் நடத்தப்படும்." – என்று குறிப்பிட்டுள்ளார்.



# கோவையில் இடம்பெறவுள்ள பிரதமர் மோடியின் பேரணிக்கு சென்னை மேல் நீதிமன்றம் அனுமதி

கோவையில் இடம்பெறவுள்ள பிரதமர் மோடியின் பேரணிக்கு சென்னை மேல் நீதிமன்றம் அனுமதியை வழங்கியுள்ளது. இந்த பேரணியானது நாளை மறுதினம் இடம்பெறவுள்ளது.

முன்னதாக மோடியின் பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்து சென்னை மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஆனந்த் வெங்கடேஸ், பொலிஸாரின் வாதத்தை ஏற்காத நிலையில் பிரதமர் மோடியின் பேரணிக்கு அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளார்.



# இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான் தாக்குதலில் 21 பேர் பலி

தென்கிழக்கு காசாவில் உள்ள குவைத் ரவுண்டானாவை குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான் வழித் தாக்குதலில் 21 பலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், இந்த தாக்குதலில் 150 பேர் காயமடைந்துள்ளனர் என கூறப்படுகிறது.

அதேவேளை, இந்த தாக்குதலினால் பலர் பலத்த காயம் அடைந்துள்ளமையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், ஹமாஸ் அமைப்பை முழுவதுமாக அழிக்கும் வரை போர் நிறுத்தம் ஏற்படாது என இஸ்ரேலில் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இந்த போரினால் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

மேலும், காசாவின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 80 சதவீதத்திற்கும் அதிகமானோர் போர் காரணமாக தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.





# தோல்வியில் முடிந்தது சீனாவின் ஆய்வு முயற்சி

சீனாவால் நிலவில் ஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்ட இரண்டு செயற்கைக் கோள்களை அவற்றின் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தும் முயற்சி தோல்வியடைந்துள்ளது.

டிஆர்ஓ-ஏ, டிஆர்ஓ-பி ஆகிய அந்த இரு செயற்கைக்கோள்களும் யுவன்ஷெங்-1எஸ் ரொக்கெட் மூலமாக ஷிசாங் ஏவுதளத்திலிருந்து விண்ணில் ஏவப்பட்டன.

அதனை தொடர்ந்து, ரொக்கெட்டின் 3 ஆம் நிலை செயல்பாட்டில் தவறு ஏற்பட்டதால் அவற்றை திட்டமிட்ட சுற்றுப்பாதையில் நிலைநிறுத்த முடியவில்லை என ஷிசாங் ஏவுதள மையம் அறிவித்துள்ளது.

அதன்படி, வழிதவறிய அந்த இரு செயற்கைக்கோள்களும் பிற செயற்கைக்கோள்களுக்கு ஆபத்தை ஏற்படுத்துவதை தடுப்பதற்காக அவற்றை விண்வெளியிலேயே அழிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கூறப்படுகிறது.

இந்த நிலையில், விண்வெளி ஆய்வுகளில் பெரும் முன்னேற்றம் கண்டு வரும் சீனாவின் இந்த தோல்வியானது அரிதான பின்னடைவாக கருதப்படுகிறது.



# காசாவிற்கான மனிதாபிமான உதவி பொருள்கள் தரையிறக்கப்பட்டன

காசாவிற்கான மனிதாபிமான உதவிகளை கொண்டு சென்ற முதலாவது கப்பலில் இருந்து உதவி பொருள்கள் தரையிறக்கப்பட்டுள்ளன.

பஞ்சத்தின் விளிம்பில் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையினால் அறிவிக்கப்பட்ட காசாவிற்கு தேவையான 200 தொன் நிறையுடைய மனிதாபிமான உதவி பொருள்கள் அடங்கிய கப்பல் கடந்த செவ்வாய் கிழமை சைப்ரஸில் இருந்து பயணத்தை ஆரம்பித்தது.

விமானம் மற்றும் தரை மார்க்கமாக உதவி பொருள்களை விநியோகிப்பதில் சிக்கல் நிலவுவதனால் கடல்



மார்க்கத்திலான விநியோகம் பயனுள்ளதாக இருக்கின்றதா? என்பதை ஆராய்வதற்காக இந்த கப்பல் காசாவிற்கு அனுப்பப்பட்டது.

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் உலக மத்திய சமையலறை அமைப்பு என்பன இணைந்து இந்த உதவி பொருள்களை அனுப்பியுள்ளன.

அரிசி, மா, பருப்பு வகைகள் உள்ளிட்ட பொருள்கள் இதில் அடங்குகின்றன.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட உதவி பொருள்கள் காசாவில் 12 பாரவூர்திகளில் ஏற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

காசாவில் துறைமுக வசதி இன்மையால் அங்கு தற்காலிக இறங்குதுறை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த பொருள்கள் காசாவை அடைவதற்கு முன்னர், இஸ்ரேல் பாதுகாப்பு தரப்பினர் அதனை ஆராய்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.



# இந்துக்களின் சமரில் யாழ். இந்து வெற்றி




**பிரபாகரன் டிலக்சன்**

13ஆவது 'இந்துக்களின் சமர்' கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இன்னிங்ஸ் மற்றும் 100 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

'இந்துக்களின் சமர்' என அழைக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி – கொழும்பு இந்துக் கல்லூரி மோதும் 13ஆவது கிரிக்கெட் போட்டி நேற்று (15) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு இந்துக் கல்லூரி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி, கொழும்பு இந்துக் கல்லூரி 55.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 80 ஓட்டங்களைச் சேர்த்தது.

அந்த அணி சார்பாக துடுப்பாட்டத்தில் அபிசேக் 14 ஓட்டங்களையும் நிதுஷான் 12 ஓட்டங்களையும் அதிகபட்சமாகச் சேர்த்தனர்.

யாழ். இந்து சார்பாக பந்துவீச்சில் சுபர்னன் மற்றும் ஹரிகரன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

பின்னர் தனது முதலாவது இன்னிங்ஸைத் தொடங்கிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, 56 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 240 ஓட்டங்களைச் சேர்த்து 160 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

துடுப்பாட்டத்தில் அந்த அணி சார்பாக பரிசித் 46 ஓட்டங்களையும் பிரேமிகன் 43 ஓட்டங்களையும் அதிகபட்சமாகச் சேர்த்தனர். பந்துவீச்சில் கொழும்பு இந்து சார்பாக நிதுசன், அபிஷேக் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளைப் கைப்பற்றினர்.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கொழும்பு இந்துக் கல்லூரி, 32 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 60 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது.

இதன்மூலம் 13ஆவது இந்துக்களின் சமர் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இன்னிங்ஸ் மற்றும் 100 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இரண்டாவது இன்னிங்ஸில் கொழும்பு இந்துக் கல்லூரி சார்பாக துடுப்பாட்டத்தில் டிலோஜன் 28 ஓட்டங்களையும், மிதுசிகன் 9 ஓட்டங்களையும் அதிகபட்சமாகச் சேர்த்திருந்தனர்.

பந்துவீச்சில் யாழ். இந்துக் கல்லூரி சார்பாக சுபர்னன், தரனிசன் ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரர் பரிசித்தும் சிறந்த பந்துவீச்சாளராக தரனிசனும் போட்டியின் ஆட்ட நாயகனாக சுபர்னனும் தெரிவாகினர்.



கனடா முரசு
பக்கங்கள் - 5
சனிக்கிழமை | 16/03/2024

## மாநில முதல்வர் மீது பிரதமர் குற்றச்சாட்டு

நியுபவுன்லேண்ட் மற்றும் லெப்ரடோர், மார்ச் 16

நியுபவுன்லேண்ட் மற்றும் லெப்ரடோரின் முதல்வர் அன்ருவ் பியுரே தொடர்ந்தும் அரசியல் அழுத் தங்களுக்கு அடிபணிகிறார் C2▶



# கியூபெக்குக்கு குடிவரவு அதிகாரங்கள் மேலதிகமாக வழங்கப் பிரதமர் எதிர்ப்பு

**கியூபெக், மார்ச் 16**

**கியூபெக் மாநிலத்திற்கு குடிவரவு கொள்கைகள் தொடர்பில் முழுமையான அதிகாரத்தை வழங்கும் கோரிக்கையை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மறுத்துள்ளார்.**

**கனடாவின் ஏனைய மாநிலங்களை விட, கியூபெக்கிற்கே அதிகளவு புதியவர்கள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்கள் வருகை தருவதால் குடிவரவு கொள்கைகள் தொடர்பில் மேலதிக அதிகாரங்கள் தேவை என கியூபெக் முதல்வர் கனேடிய பிரதமரிடம் கோரியிருந்தார்.**

கியூபெக்கில் அதிகரிக்கும் புதியவர்கள், புதிய புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவது தொடர்பில் மத்திய அரசாங்கம் கவனம் செலுத்தும் என பிரதமர் ட்ரூடோ கியூபெக் முதல்வரிடம் தெரிவித்துள்ளார்.

மொன்ரியலில் மார்ச் 15ஆம் திகதி கியூபெக் முதல்வருடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்த போதே, பிரதமர் இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

# தமிழ் சமூக மையத்தின் நிர்மாணம் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் நிகழ்வு இன்று



**ஒன்ராரியோ, மார்ச் 16**

டொரன்டோவில் அமைக்கப்படவுள்ள தமிழ் சமூக மையத்தின் நிர்மாணம் குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவு-படுத்தும் நிகழ்வு ஒன்று இன்று ஸ்கார்பரோ சிவிக் சென்டரில் நடைபெறவுள்ளது.

தமிழ் சமூக மையத்தின் நிர்மாணத்திற்காக ஏற்கனவே மத்திய அரசு 16 மில்லியன் டொலர்களயைம், மாநில அரசு 13.2 மில்லியன் C2▶

# கனடிய தமிழர் பேரவை முன்னெடுக்கும் வருடாந்த மகளிர் தினம் மார்ச் 24 இல்!

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

ஒன்ராரியோ, மார்ச் 16

கனடிய தமிழர் பேரவையின் வருடாந்த மகளிர் தின நிகழ்வு, மார்ச் மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் போது வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் பொருளாதார சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்பட்ட 'Made in Mullaitivu' செயற்திட்டத்தின் இரண்டாம்கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அறிவிக்கப்படவுள்ளதாக கனடியத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் உள்ளூர் உற்பத்திகளை சர்வதேச ரீதியில் சந்தைப் படுத்துவதோடு பெண்களுக்கான நிலையான நீதி, ஸ்திரத்தன்மைக்கான பாதையை அமைப்பதே இந்த செயல் திட்டத்தின் பிரதான நோக்கமாகும் என கனடியத் தமிழர் பேரவை குறிப்பிட்டுள்ளது.

பெண்களிற்கு அதிகாரமளித்தல் மற்றும் சமத்துவத்தை நோக்கிய இந்த முக்கியமான அறிவிப்பைத் தவறவிட வேண்டாம் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் குழு விவாதங்கள், வலையமைப்புக்கள், வாய்ப்புகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் ஆகியவையும் இந்த நிகழ்வில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கான நுழைவுச் சீட்டு மற்றும் கூடுதல் தகவலுக்கு, info@canadiantamilcongress.ca என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும் அல்லது 647-300-1973 என்ற எண்ணை அழைக்கவும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கார்பன் வரி அதிகரிப்பை எதிர்க்கும் திட்டத்தில் இணைய பிரிட்டிஷ் கொலம்பியா முதல்வர் மறுப்பு

பிரிட்டிஷ் கொலம்பியா,மார்ச்16

மத்திய அரசாங்கத்தின் கார்பன் வரி அதிகரிப்பைத் தடுப்பதற்கு ஆதரவு கோரி எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவர் அனுப்பிய கடிதத்தை பிரிட்டிஷ் கொலம்பியா முதல்வர் நிராகரித்துள்ளார்.

ஏப்ரல் முதலாம் திகதி அதிகரிக்கப்படவுள்ள கார்பன் வரியை எதிரப்பதற்கு ஏனைய ஏழு மாநிலை முதல்வர்களுடன் இணைந்து ஆதரவளிக்குமாறு கோரி பியர் பொலிவர் இந்த கடிதத்தை எழுதியிருந்தார்.

மத்திய அரசாங்கத்தினால் விதிக்கப்படும் இந்த வரி அதிகரிப்பானது மாநிலத்தின் மீதான வரி திணிப்பு எனவும், மக்கள் மீது சுமையை அதிகரிக்கும் எனவும் பொலிவரின் ஒரு பக்கக் கடிததத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வடஅமெரிக்காவின் முதலாவது கார்பன் வரியினை பிரிட்டிஷ் கொலம்பியா 2008ஆம் ஆண்டில் விதித்திருந்தது.

அல்பேர்ட்டா, சசகெச்சுவான், ஒன்ராரியோ, நியூ பிரன்ஸ்விக், நோவாஸ்கோட்சியா, பிரின்ஸ் எட்வர்ட் ஐலன்ட் மற்றும் நியுபவுன்லேன்ட் மற்றும் லெப்ரடோர் மாநில முதல்வர்கள் ஏற்கனவே இந்த காபன் வரிக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு இணங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**மாநில முதல்வர் மீது...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ விமர்சித்துள்ளார்.

முதல்வர் அன்ருவ் பியுரேயின் கார்பன் வரி எதிர்ப்பு நிலைப்பாடு குறித்து கருத்து தெரிவித்த போதே ட்ரூடோ அதனைத் தெரிவித்தார்.

கனடியர்கள் செலுத்தும் வரியை விட அதிகளவு பணத்தினை டொரன்டோ மக்கள் இதன்மூலம் மீள்கொடுப்பனவாக பெறுவார்கள் எனப் பிரதமர் கூறியுள்ளார்.

இந்த அடிப்படை கணித அறிவில்லாத எதிர்க்கட்சியின் பிராசரத்திற்கு நிறைய மாநில முதல்வர்கள் ஏமாற்றம் கண்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

**தமிழ் சமூக...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டொலர்களையும் வழங்க உறுதியளித்துள்ளன.

அத்துடன், டொரன்டோ நகர சபை மிகவும் குறைந்த குத்தகைக்கு கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான காணியை வழங்கியிருக்கின்றது.

நிர்மாணத்திற்கான ஆரம்ப கட்டப் பணிகள் 2019ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த நடவடிக்கைகளை புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் சமூக மைய நிர்வாகக் குழுவானது ஆரம்பித்துள்ளதுடன், 2025ஆம் ஆண்டில் முதல் கட்ட நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

## Super Deal of this Week

### till March 17th




LOWEST PRICE
~~10.99$~~
8.99
Only at GUNAAM'S SUPER MARKET




LOWEST PRICE
~~19.99$~~
15.99
Only at GUNAAM'S SUPER MARKET



LOWEST PRICE
LB 7.99$
Only at GUNAAM'S SUPER MARKET
ஊர் ஆட்டிறைச்சி



LOWEST PRICE
LB 6.99$
Only at GUNAAM'S SUPER MARKET
Ceylon விளைமீன்

## Gunaam's super market இந்த வாரம் Super Special Deal

நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து விதமான மீன்களையும் மிக மிகக் குறைந்த விலையில் fresh ஆக பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| Ceylon விளைமீன் | - $7.99 lb | Ceylon சீலா Fish | - $8.99 lb |
| Ceylon ஓரா | - $6.99 lb | Ceylon கொடுவா Fish | - $8.99 lb |
| Ceylon கும்பிளா | - $6.99 lb | Ceylon முழு King Fish | - $9.99 lb |
| Ceylon திரளி | - $7.99 lb | Ceylon CRAB | - $10.99 lb |
| Ceylon காரல் | - $7.99 lb | ஊர் ஆட்டிறைச்சி | - $7.99 lb |
| சின்னற்றிப் பாரை | - $8.99 lb | காட்டுப் பன்றி | - $4.99 lb |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998

# பிரதமரின் நிகழ்வுக்குப் பக்கத்தில் போராட்டக்காரரில் ஒருவர் கைது




**ஒன்ராரியோ, மார்ச் 16**

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கலந்து கொண்ட நிகழ்வு இடம்பெற்ற இடத்திற்கு அருகில் போராட்டத்தில் ஈடுபட்ட பலஸ்தீன ஆதரவு போராட்டக்காரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.


கிங் எட்வர்ட் ஹோட்டலில் லிபரல் கட்சியின் நிதிசேர்ப்பு நிகழ்வில் மார்ச் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கலந்துகொண்டிருந்தார்.

இந்த ஹோட்டலின் பிரதான வாயிலில் பலஸ்தீன ஆதரவு போராட்டக்காரர்கள் திரண்டிருந்த நிலையில், பின்பக்க வாயில் வழியாக பிரதமர் ஹோட்டலிற்குள் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேல் – ஹமாஸ் மோதல் தொடர்பில் பிரதமர் ட்ரூடோவின் நிலைப்பாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்து, இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இந்த போராட்டத்தின் காரணமாக டொரன்டோவின் டவுன்டவுன் பகுதியில் வீதிகள் மூடப்பட்டிருந்தன.

தவறாக நடந்து கொண்டமை தொடர்பில் போராட்டக்காரர் ஒருவர் கைது செய்ப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.





# தம்மைப் பூர்வீகக் குடிகள் என அடையாளப்படுத்தும் மோசடி வழக்குகள் அதிகரிக்கும் என்று எச்சரிக்கை

ஒன்ராரியோ,மார்ச்16

பூர்வீகக் குடிகளின் அடையாள மோசடி வழக்குகள் அதிகளவில் கனடிய நீதிமன்றத்திற்கு வரவுள்ளன என பிரிட்டிஷ் கொலம்பியா நீதிபதி எச்சரித்துள்ளார்.

பூர்வீகக் குடியைச் சேர்ந்தவர்களாகத் தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதால், அதிகளவுப் பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதால், இந்த அடையாள மோசடி நிகழ்வதாக நீதிபதி டேவிட் பெட்டர்சன் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில் நீதிபதிகள் மிகவும் உன்னிப்பாக தீர்மானம் எடுக்க வேண்டும் எனவும், பூர்வீகக் குடிகளுக்கான தண்டனை வழங்கப்படுவதற்கு முன்னர் குற்றம் செய்தவர்களின் உண்மையான அடையாளம் தொடர்பில் அதிக சிரத்தை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.




# டிக்டொக் பாதுகாப்பு மீளாய்வு தொடர்பில் பெற்றோர் கவலைப் படத் தேவையில்லை!

ஒன்ராரியோ,மார்ச்16

டிக்டொக் பாதுகாப்பு மீளாய்வு எளளகவலை கொள்ளத் தேவை யில்லை என தொழில்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மார்ச் 15ஆம் திகதி இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே தொழில்துறை அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

டிக்டொக் பயன்படுத்தும் கனடியர்கள் மற்றும் டிக்டொக்கிற்கு பழக்கப்பட்டுள்ள இளையவர்களின் பெற்றோர்கள் இந்த டிக்டொக் பாதுகாப்பு மீளாய்வு தொடர்பில் கவலை கொள்ள வேண்டுமா என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இந்த மீளாய்வு குறித்து அரசாங்கம் இரகசியம் காத்தமைக்கான காரணம் வினவப்பட்டபோது, இந்த மீளாய்வு நிறுவனம் சார்ந்தது எனவும், பயனர்கள் சார்ந்தது அல்ல எனவும் அவர் பதிலளித்துள்ளார்.




# ரோயல் வங்கிக் கொள்ளையர்கள் பொலிஸாரினால் மடக்கப்பட்டனர்

**ஒன்ராரியோ,மார்ச்16**

வெள்ளிக்கிழமை பிற்பகல் பர்லிங்டனில் பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து ஆயுதமேந்திய வங்கிக் கொள்ளையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொள்ளைச் சம்பவம் ஒன்று தொடர்பில் ஹால்டன் பொலிஸார் முதலில் மெயின்வே மற்றும் குயெல்ப் லைன் பகுதியில் உள்ள ரோயல் வங்கிக்கு மார்ச் 15ஆம் திகதி மாலை 3:30 மணிக்கு அழைக்கப்பட்டனர். ஒரு கொள்ளைக்காக.

சந்தேகநபர்கள் வங்கியில் இருந்து வாகனத்தில் தப்பிச் செல்ல முயற்சித்த போது, அதிகாரிகள் அவர்களை சிறிது தூரத்தில் கண்டுபிடித்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு சந்தேக நபர் உடனடியாக கைது செய்யப்பட்டார் எனவும், மற்றையவர் அவரது வாகனத்தில் தங்கியிருந்தமையுடன், துப்பாக்கி வைத்திருந்தார் எனவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து, சந்தேக நபரிடம் பொலிஸார் பேச்சு நடத்தினர்.

மாலை 6 மணிக்கு முன்னதாகவே, நிலைமை சுமுகமாகிவிட்டதாகவும், சந்தேக நபரை எந்தவித அசம்பாவிதமும் இன்றி கைது செய்தனர் எனவும் பொலீஸார் தெரிவித்தனர்.